29th September 1958]

ரணங்கள் சம்பந்தமாக, 1367 பசலியில் கடன்களை ஒத்தி வைக்கவும், கால்நடை தீவனத்திற்கு பக்கத்து ஜில்லாக்களிலிருந்து வைக்கோல் முதலியவை வரவழித்து, குறைந்த விலைக்கு விற்பதும், வரி வசூலிப்பதில், தீவிரமாக இல்லாமல், சற்று நிதானமாகவும் இருக்கிறதும், இவையெல்லாம் செய்யப்படுகின்றன.

SRI V. K. KOTHANDARAMAN : சென்ற இரண்டு வருஷ காலமாக மக்கள் அதிக விலை கொடுத்து உணவுப் பொருள்களை வாங்கமுடியாமல், நியாய விலைக் கடைகளை வைக்கும்படி கேட்டும், அந்த ஜில்லாவிலே ஒரு கடையும் வைக்கப்பட வில்லை.

MR. SPEAKER : அங்கத்தினர் அபிப்பிராயம் கொடுக்கிறுர். கேள்வியாகக் கேட்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

SRI V. K. KOTHANDARAMAN : அந்த பிரதேசத்தில் நியாய விலைக் கடைகளை உடனடியாகத் திறக்க சர்க்கார் முன்வருவார்களா ?

MR. SPEAKER : பதில் இல்லை.

Training in Madras Flying Club and Sainik Course

* 596 Q.—SRI P. G MANICKAM : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) சென்னை விமான கிளப்பிலும், டேராடூனிலுள்ள சைனிக் திட்டத்திலும் 1956–57, 1957–58-ம் ஆண்டுகளிலே பயிற்சிபெற்ற ஒதுக்கப்பட்ட மாணவர்களுக்கும், பழங்குடி மாணவர்களுக்கும் விசேஷ உபகாரச் சம்பளங்கள் கொடுப்பதற்காகச் செலவிடப்பட்ட தொகை எத்தனை ?

(ஆ) 1958–59-ம் வருஷத்திலே மேற்கண்ட பயிற்சிபெற ஒதுக்கப்பட்ட மாணவர்களுக்கும், பழங்குடி மாணவர்களுக்கும் எத்தனை விசேஷ உபகாரச் சம்பளங்கள் வழங்கப்படும் ?

THE HON. SRI P. KAKKAN : (a)—

Amount spent for training in Madras Flying Club.	Amount spent for Sainik Course in Dehra Dun.
1956–57—Rs. 240·75 nP	Nil.
1957–58—Rs. 382	Nil.

(b)—

Madras Flying Club.	Sainik Course, Dehra Dun.
Two Non-residential scholarships of the value of Rs. 191 each will be awarded to eligible communities.	One scholarship of the value of Rs. 1,550 will be awarded to eligible communities.

SRI P. G. MANICKAM : சர்க்கார் நல்ல முறையிலே திட்டங்களைக் கொண்டு வர முயற்சிகள் செய்தாலும், ஹரிஜன மக்களுக்கு அதைத் தெரிவிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. ஆகையினுல், இனிமேலாவது, பிரசாரங்கள் மூலமாக விளம்பரப்படுத்தி, ஹரிஜன மக்களுக்குத் தெரிவிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்தச் சபையிலேயே பலமுறை தெரிவிக்கப்படுகிறது. ப்ளையிங் கிளப் மூலமாகவும் தெரிவிக்கிறுர்கள். 1957-58-ல் ஸ்காலர்ஷிப்புகள் கொடுத்து மாணவர்கள் சேர்ந்திருக்கிறுர்கள். டேராடூன் ஸ்தாபனத்தாரையும் கேட்டிருக்கிறோம். அவையும் தெரிவிக்கப்படும்.